செ.வெ.எண்: 714 நாள்: 04.11.2020

**தஞ்சாவூர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 2020-21 ஆம் நிதியாண்டிற்கான திறன் மேம்பாட்டு பயிற்சி தாட்கோ மூலம் வழங்கப்படுகிறது. என மாவட்ட ஆட்சித் தலைவர் ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவர்கள் தகவல்.**

தாட்கோ மூலமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த 18 முதல் 35 வயதிற்குள் படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு குறுகிய கால (3 மாதம் முதல் 6 மாதம் வரையிலான) திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திக்கொள்ள கட்டணமில்லாமல் அளிக்கப்படுகிறது.

இவ்வாண்டு தஞ்சாவூர் மாவட்டத்தில் 3 பயிற்சி நிறுவனங்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் நடத்திட பயிற்சி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

தங்களது தகுதிக்கேற்ப ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த 18 முதல் 35 வயதிற்குள் உள்ள படித்த வேலையற்ற இளைஞர்கள் பயிற்சி நிறுவனங்களை தொடர்பு கொண்டு தாங்கள் விரும்பும் பயிற்சியினை மேற்கொள்ள தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மூலமாக வழங்கப்படும் இத்திறன் மேம்பாட்டு பயிற்சி முற்றிலும் கட்டணமில்லாமல் வழங்கப்படுகிறது. மேலும் பயிற்சி பெறுபவர்கள் பயிற்சி பெற சென்று வருவதற்கான பயணப்படி, போக்குவரத்து செலவு மற்றும் அனுமதிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும். பயிற்சியின் முடிவில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு உரிய சான்றிதழ் வழங்கப்படும்.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | கைபேசி எண் | பயிற்சியின் பெயர் | மாவட்டம் | பயிற்சி நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|---|
| 1 | அரசு இன்ஸ்டிடியூஷன் | 9942664366 | தியேட்டர் தொழில் நுட்ப வல்லுநர் -Operating Theatre Technician | தஞ்சாவூர் . | எண்.149 பிக் ஸ்ரூட், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் |
| 2 | சக்தி விநாயகா கம்யூனிட்டி கல்லூரி | 8680838015 | பொது கடமை உதவியாளர் General Duty Assistant | தஞ்சாவூர் . | எண்.182, சிவபுரம், கோபுரம் 2வது மாடி, பிதரிகுளம் சாலை, கும்பகோணம். தஞ்சாவூர் |
| 3 | ஸ்டார் இண்டஸ்டிரியல் ட்ரைனிங் இன்ஸ்டிடியூட் | 9245277011 | கை எம்பிராய்டர் Hand Embroiderer<br>தையல் இயந்திர ஆப்ரேட்டர் Sweing Machine Operator<br>கணக்கு நிர்வாகி செலுத்த) பெறத்தக்க மற்றும்) வேண்டிய கணக்குகள் Accounts Executive (Accounts Payable & Receivable)<br>டிக்கெட் ஆலோசகர் Ticketing Consultant<br>உதவி அழகு சிகிச்சையாளர் Assistant Beauty Thrapist (version-2) | தஞ்சாவூர் . | எண்.25 பக்தபுரி சாலை, கும்பகோணம். தஞ்சாவூர் |

திறன் மேம்பாட்டு பயிற்சி முடித்து சான்று பெற்ற பயிற்சியாளர்கள் (தாட்கோவினால்) மாவட்ட மேலாளரிடம் தாங்கள் பெற்ற பயிற்சிக்கு ஏதுவாக தொழில் தொடங்கிட, தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் பயன்பெறலாம். இலவச மான்யத்துடன் கூடிய வங்கி கடன் வழங்கிட ஆவணச் செய்யப்படும். இதன் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழ்வாதாரம் உயர்வதுடன், வாழ்வும் உயரும் என மாவட்ட ஆட்சித் தலைவர் ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.